பக்கங்கள்:-17 + 05

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்!

களுத்துறை, ஹொரணை – கிரேஸ் லேண்ட் பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். மோட்டார் சைக்கிளில் 03

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | சித்திரை 22 | ஞாயிற்றுக்கிழமை | 05.05.2024 | அதிர்வு 278

## அமைச்சராகும் மொட்டுக் கட்சி எம்.பி. யார்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சரவையில் அமைச்சராக ஒருவர் அடுத்த வாரம் நியமிக்கப்படவுள்ளார் என்று தெரியவருகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அரசியல்வாதியே இவ்வாறு அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார் என்று அறியமுடிகின்றது.

2000 ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி வரும் இவர், இதற்கு முன்னர் பல அரசுகளில் அமைச்சர் பதவிகளை வகித்துள்ளார் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவருக்கு என்ன அமைச்சுப் பதவி கிடைக்கும் என்பது இதுவரை வெளியாகவில்லை என்று கூறப்படுகின்றது.




# பிரபா இருந்திருந்தால் பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமில்லை

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிரோடு இருந்திருந்தால் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை மாலை மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார். 03



## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான ஏற்பாடுகள் பூர்த்தி




2023ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையை நாளை முதல் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இம்முறை 3 இலட்சத்து 87 ஆயிரத்து 648 பாடசாலை விண்ணப்பதாரிகளும் 65 ஆயிரத்து 331 தனியார் விண்ணப்பதாரிகளுமாக மொத்தமாக 4 இலட்சத்து 52 ஆயிரத்து 979 பரீட்சார்த்திகள் நாடளாவிய ரீதியில் 3 ஆயிரத்து 527 பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதேவேளை, விசேட தேவையுடைய பரீட்சார்த்திகளுக்காக விசேட பரீட்சை நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேலும் கூறியுள்ளார் .

# சு.கவின் ஜனாதிபதி வேட்பாளரை மைத்திரி தீர்மானிக்கவே முடியாது

## தயாசிறி கடும் கொதிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை மைத்திரிபால சிறிசேன தன்னிச்சையாக தீர்மானிக்க முடியாது என்று அக்கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நீதி அமைச்சர் விஜயதாஸ களமிறங்குவார் என அந்தக் கட்சியின் முன்னாள் தலைவரான மைத்திரிபால சிறிசேன அறிவித்திருந்தார்.

இந்நிலையிலேயே தயாசிறி ஜயசேகர எம்.பி. மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பிளவுபட்டுள்ள அணிகள் ஒன்றுபட வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

# ஆடை விற்பனை நிலையத்தில் பணப்பையை திருடிய பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் கைது!



கண்டியில் ஆடை விற்பனை நிலையமொன்றில் பெண்ணொருவரின் பணப்பையைத் திருடினார் எனக் கூறப்படும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கண்டி குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பணப்பையின் உரிமையாளர் கடந்த மாதம் 9 ஆம் திகதி பணப்பையைக் காணவில்லை எனக் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது, ஆடை விற்பனை நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.வி. கமரா அமைப்பைக் கண்காணித்த பொலிஸார் பெண் ஒருவர் பணப்பையைத் திருடிச் சென்றதை அவதானித்துள்ளனர்.

இதனடிப்படையில் மேற்படி பெண் கைது செய்யப்பட்டு விசாரணை நடத்தப்பட்டபோது, அவர் பொக்காவல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# பேத்தியைக் காப்பாற்ற முயன்ற பாட்டி ஓட்டோ மோதி உயிரிழப்பு!



ஓட்டோவில் மோதவிருந்த பேத்தியைக் காப்பாற்ற முயன்ற பாட்டி அதே ஓட்டோவில் மோதி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெந்தோட்டை, ரொபோல்கொட பகுதியில் நேற்று மாலை நேர வகுப்புக்குச் சென்ற பேத்தியைப் பாட்டி அழைத்து வரும்போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது .

பெந்தோட்டை ரொபோல்கொட பகுதியைச் சேர்ந்த 65 வயதான மூதாட்டியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். அவரின் பேத்தி காயமின்றி தப்பியுள்ளார்.

ஓட்டோவைச் செலுத்திச் சென்ற பிலியந்தலை பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் .

இந்த விபத்தில் ஓட்டோ சாரதியும் காயமடைந்து பொலிஸ் பாதுகாப்பில் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.



# கட்டாக்காலிகளின் தொல்லை கல்முனையில் அதிகரிப்பு





அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வீதிகள், கடற்கரை பகுதிகளில் கட்டாக்காலி மாடுகள் நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால், விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அத்துடன், உள் வீதிகளில் பொதுமக்கள் நடமாட முடியாத அளவுக்கு கட்டாக்காலி மாடுகள் நாய்களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. வீதியில் செல்பவர்களை தெரு நாய்கள் கடிக்க வருகின்றன. இதன் காரணமாக வீதியில் பயணம் செய்வோர் காயங்களுக்குள்ளாகின்றனர்.

மேலும், வீதிகள் கடற்கரை பகுதிகளில் கொட்டப்படும் விலங்கு எச்ச கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாமையினால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

இதனால், இப்பகுதிகளில் சுகாதார சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதுடன், தற்போது, 20 இற்கும் மேற்பட்ட நாய்கள் கட்டாக்காலிகளாக உலாவி கழிவுகளை உண்பதற்காக வெளியிடங்களில் இருந்து உட்பிரவேசிக்கின்றன.

மேலும், இப்பிரதேசத்தில் பிரதான வீதிகளில் இரவு பகல் பாராது மேற்படி கட்டாக்காலிகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் தொடர்ச்சியாக விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன.

குறிப்பாக, கூட்டம் கூட்டமாக வீதிகளில் நடமாடுவதினாலும் வீதிகளில் கூட்டமாக கிடப்பதினாலும் தொடர்ச்சியாக விபத்துக்கள் இடம் பெற்று வருகின்றன.

எனவே, கட்டாக்காலி மாடுகள், நாய்களின் நடமாட்டங்களை கட்டுப்படுத்தி மக்களை விபத்துக்களில் இருந்து பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பிரபா இருந்திருந்தால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

“சில தமிழ்க் கட்சிகள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்தைத் தற்போது முன்னெடுத்து வருகின்றனர். இதில் எவ்வித உண்மைத்தன்மையும் இல்லை. அது சரியானதும் நியாயமானதுமாக நான் கருதவில்லை.

கடந்த காலங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்பவர்கள் தங்களது சுயலாபங்களுக்காகத் தீர்க்க முடியாத பிரச்சினைகளைத் தூக்கிப் பிடித்து வந்தனர்.

அவர்கள் தமிழ்ச் சமூகத்துக்கு ஏற்ற நடைமுறைக்கு சாத்தியமான யதார்த்த முடிவுகளை எடுக்க வேண்டும். இந்தத் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயம் அரசியல் உள்நோக்கம் கொண்ட சுயலாபம் கொண்டதாகும்.

முக்கிய மூன்று ஜனாதிபதி வேட்பாளர்களுடன் எமது மக்களது பிரச்சினைகள் சம்பந்தமாகக் கலந்துரையாடி, அதன் பின்பு ஓர் உத்தரவாதத்தைத் ஏற்படுத்திக்கொள்ள நாம் அவர்களை இணங்க வைக்க வேண்டும். தமிழ்ப் பொது வேட்பாளர் என்பது ஒரு பொய்த்தனம். பிரபாகரன் உயிரோடு இருந்திருந்தால் பொது வேட்பாளர் என்ற பேச்சுக்கே இடமில்லை.” – என்றார்.

## துப்பாக்கிச் சூட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரவேசித்த இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த 35 வயதுடைய நபர் ஹொரணை வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காகச் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.










# தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையில் தொடர் ஓட்ட முறையில் நீத்திக் கடந்து சாதனை

(மன்னார் நிருபர்)

இலங்கையின் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரை பாக்ஜலசந்தி கடலை 10 மணிநேரம் 10 நிமிடங்களில் 12 நீச்சல் வீரர்கள், வீராங்கணைகள் தொடர் ஓட்ட முறையில் நீந்தி சாதனை படைத்தனர்.

மகாராஸ்ட்ரா மாநிலம் தானே பகுதியில் செயல்பட்டு வரும் ராம் சேது திறந்த நீர் நீச்சல் அறக்கட்டளையை சோந்நத மகராஸ்ட்ரா மாநிலத்தை சேர்ந்த 12 நீச்சல் வீராங்கணைகள் இரண்டு குழுக்களாக பிரிந்து இலங்கை தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு வரை உள்ள சுமார் 30 கிலோ மீற்றர் தொலைவிலான பாக்ஜலசந்தி கடற்பரப்பினை நீந்தி கடப்பதற்கு தீர்மானித்தனர்.

இதற்காக, இந்திய வெளியுறவுதுறை, இலங்கை தூதரகம் மற்றும் பாதுகாப்புதுறை அமைச்சகத்திடம் அனுமதி கோரியிருந்தனர்.

இரு நாட்டு அனுமதியும் கிடைத்த நிலையில் கடந்த வெள்ளிகிழமை பிற்பகல் இராமேஸ்வரம் மீன்பிடி இறங்குதளத்திலிருந்து இரண்டு படகுகளில் தங்கள் நீச்சல் பயிற்சியாளர் தலைமையில் மீனவர்கள் உள்ளிட்ட 20 பேர் கொண்ட குழுவினர் தலைமன்னார் வந்தனர்.

தலைமன்னாரிலிருந்து நேற்று காலை 6.30 மணிக்கு கடலில் குதித்து தொடர் ஓட்ட முறையில் நீந்த தொடங்கி 12 பேரும் மாலை 4.40 மணியளவில் (10 மணி நேரம் 20 நிமிடங்களில் நீந்தி) தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதியை சென்றடைந்தனர்.

நீந்தி சாதனை படைத்தவர்களை சுங்கத்துறை, மரைன் பொலிஸார் மற்றும் சுற்றுலாப்பயணிகள் அரிச்சல்முனையில் வரவேற்றனர்.











# சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் கௌரவித்தல் நிகழ்வும்

(எம்.எம்.ஜெஸ்மின்)

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல். நசார் தலைமையில் வருடாந்த பரிசளிப்பு விழா பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வரும், மெற்றோபொலிடன் கல்லூரியின் ஸ்தாபகரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீட உறுப்பினருமான கலாநிதி. சிராஸ் மீராசாஹிப் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இதன் போது இப்பாடசாலைக்கு அவசர தேவையாக இருந்த கனணியும், பிரின்டிங் மெசினையும் சிராஸ் மீராசாஹிப் பாடசாலைக்கு வழங்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்வில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு முன்னாள் முதல்வரால் சான்றிதழ்கள் வழங்கிவைக்கப்பட்டன.







நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வதிவிட விசா முறைமை

இலங்கையில் இரட்டைக் குடியுரிமை பெற முடியாமல் நெருக்கடிகளை சந்திக்கும் - வெளிநாட்டில் வசிக்கும் - இலங்கை வம்சாவளியினருக்குப் புதிய வழிமுறையில் வதிவிட வசதி வாய்ப்பு வழங்கும் திட்டம் ஒன்றை இலங்கை அரசு கொண்டு வரத் தீர்மானித்திருக்கின்றது.

வெளிநாட்டுப் பிரஜா உரிமை பெற்ற இலங்கை வம்சாவளியினர் பலர் இலங்கையின் பிரஜாவுரிமையை இரண்டாவதாக மீண்டும் பெறுவதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகின்றனர்.

அந்தந்த நாடுகளில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் காரணமாகவும், இலங்கையில் இரட்டைக் குடியுரிமைக்கான அனுமதி பெறுவதில் உள்ள நீண்ட நடைமுறை நடவடிக்கைகள் காரணமாகவும் பல்லாயிரக்கணக்கானோர் இரட்டைக் குடியுரிமை பெறுவதில் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்தகையோர் இலங்கையில் வசிக்கவும், வேலை செய்யவும் இடமளிக்கத்தக்க விதத்தில் புதுப்பிக்கத்தக்க நிரந்தர வதிவிட விசா வழங்கும் முறை ஒன்றை கொண்டு வருவதற்கு அரசு தீர்மானித்து உள்ளதாக செய்திகள் வெளியாகி உள்ளன.

இரட்டைக் குடியுரிமையைப் பெற முடியாதவர்கள் விரைவில் இங்கு வசிக்கவும் வேலை செய்யவும் புதுப்பிக்கத்தக்க நிரந்தர வதிவிட விசாவைப் பெறவும் முடியும் என குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஜெனரல் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான விதிமுறைகள் இறுதி செய்யப்பட்டுள்ளன, விரைவில் திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு முன்னர் வர்த்தமானியில் அது வெளியிடப்படும் என்றார் அவர்.

வேறொரு நாட்டில் குடியுரிமை பெற்றதன் பின்னர் இலங்கைக் குடியுரிமை இழந்த இலங்கையர்கள், இலங்கையர் அல்லாத அவர்களின் மனைவி அல்லது கணவன் மற்றும் அவர்களின் பிள்ளைகள் வதிவிட விசாவிற்கு உரிமையுடையவர்கள் என்றும் கூறப்பட்டது.

விண்ணப்பம் செய்யும் நபர் விசாவிற்கு 1,000 அமெரிக்க டொலர்கள் செலுத்த வேண்டும் அதே நேரத்தில் இலங்கையர் அல்லாத கணவன் அல்லது மனைவி மற்றும் ஒரு குழந்தைக்கு தலா 400 அமெரிக்க டொலர்கள் வசூலிக்கப்படும்.

அந்தந்த நாடுகளில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் காரணமாக இரட்டைக் குடியுரிமையைப் பெற முடியாத வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் பல முறையீடுகளை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கட்டுப்பாட்டாளர் நாயகம் மேலும் தெரிவித்திருக்கின்றார்.


நாட்டின் அபிவிருத்திக்கு உதவுமாறு வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களிடம் வேண்டுகோள் விடுக்கும் தனது கொள்கைக்கு இணங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தத் திட்டத்திற்கு அனுமதி வழங்கியுள்ளார் என்றும் அவர் கூறினார்.

தற்போதைய நிலைமையின்படி, முதல் வருடத்தில் 3,000 குடும்பங்களை உள்ளடக்கிய சுமார் 10,000 விண்ணப்பங்களைத் தாங்கள் எதிர்பார்க்கின்றனர் என இலுக்பிட்டிய கூறினார்.

நிரந்தர வதிவிட விசாக்கள் 10 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு அதன் பிறகு புதுப்பிக்கப்படும் என்றும் அவர் கூறுகின்றார்.

இத்தகைய விசாக்களைப் பெறபவர்கள் இங்கு வேலைவாய்ப்பைப் பெறவும், பொதுச் சேவையில் சேரவும், வியாபாரத்தில் ஈடுபடவும், இலங்கையில் முதலீடு செய்யவும் முடியும் என்றும் கூறப்படுகின்றது.

ஆயினும் புலம்பெயர் தமிழர்கள் இந்த வதிவிட விசாவை நம்பியிராமல், இரட்டைக் குடியுரிமை பெறுவதிலேயே அதிக ஈடுபாடு காட்ட வேண்டும். இரட்டைக் குடியுரிமை பெற்றால்தான் இந்த நாட்டின் வாக்காளராக முடியும். அப்படி வாக்காளராவதன் மூலம் நாட்டில் தமிழர்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கச் செய்வதில் புலம்பெயர் தமிழர்கள் கணிசமாகப் பங்காற்ற முடியும். அதற்கு இரட்டைக் குடியுரிமை முறையே வழியாகும்.


ரூ 15,000*
இல் இருந்து
INDSRI FERRY
யாழ்
↕
நாகை
சுற்றுலா செல்வோம் சிவகங்கையில்
13/05/24
இல் இருந்து தினசரி சேவை
• பாரம்பரிய சுற்றுலா
• வணக்கத்தலங்கள்
• அழகிய மலையகம்
மேலும் அனுபவிக்க...
பதிவுகளுக்கு
www.sailindsri.com
Google play
Download on the App Store
*ஒரு வழிக் கட்டணம் (வரிகள் இன்றி)

# குணம்ஸ் சுப்பர் மார்க்கட்

## GUNAAM'S SUPER MARKET

## Super Deal of this Week

### till May 05th



LOWEST PRICE 6.99 $ Only at GUNAAM'S SUPER MARKET

LOWEST PRICE 3 for 10$ Only at GUNAAM'S SUPER MARKET




LOWEST PRICE 8.99 $ Only at GUNAAM'S SUPER MARKET



LOWEST PRICE 7.99$ Only at GUNAAM'S SUPER MARKET



ஊர் கோழி

LOWEST PRICE LB 8.99$ Only at GUNAAM'S SUPER MARKET



ஊர் ஆட்டிறைச்சி

LOWEST PRICE LB 8.99$ Only at GUNAAM'S SUPER MARKET



விளைமீன்

**Gunaam's super market** இந்த வாரம் அள்ளித்தரும் **super deal** அனைத்துப் பலசரக்குப் பொருட்கள், தாயக பழ வகைகள், மீன், இறைச்சி, மரக்கறிகள் **fresh**ஆக மிகமிக குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**Frozen** இறால், நண்டு, **Frozen Rotti, Frozen Gram, Coconut,** சமையல் பாத்திரங்கள், பூஜைப் பொருட்கள், மண்வெட்டி, பிக்கான், பூக்கன்றுகள், மரக்கறி, அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| 777 Papadam buy one | - $1.99 |
| Buy 3 for | -$5.00 |
| 200g Tamarind 5for | - $5.00 |
| Kott mee Noodles 5 for | - $5.00 |
| Harischsndra papadam 5 for | -$5.00 |
| Maggi coconut milk powder | -$3.99 |
| 800g coconut milk powder | -$11.99 |
| Niru Tin Fish 3for | - $10.00 |
| Kloadiya Tin fish 3 for | - $10.00 |
| Aroy_D coconut milk tin 4 for | - $ 10.00 |
| 3L MR.Goudas sun flower oil | - $ 8.99 |
| MR. Goudas sea salt | - $ 1.49 |
| MR. Goudas table salt | - $ 1.00 |
| 71b MR. Goudas brown sugar | - $ 8.99 |
| Priya Basmati rice | - $ 7.99 |
| 41b mysoor Dall | - $ 3.99 |
| Uruthira Serage Samba rice | - $ 15.99 |
| 400g milo | - $ 4.99 |
| MR. Goudas condensed tin milk | -$ 1.49 |
| Ba Ba Payasam mix | - $ 2. 99 |
| Ba Ba uppuma mix | - $ 2.99 |
| Narasu's coffee | - $ 4.99 |
| Maharaja அரிசிமா | - $ 8.99 |
| Uruthira நாட்டுச்சக்கரை | - $ 3.99 |
| 81b NIRU mysoor Dall | - $ 7.99 |
| Ceycan Matta Rice | - $ 8.99 |

| | |
|---|---|
| திரிபோசா மா | -$ 6.99 |
| MD mango and mixed Fruit cordial | - $ 4.99 |
| VSP நல்லெண்ணை | - $12.99 |
| கத்தரிக்காய் | - $1.99 lb |
| சின்ன வெங்காயம் | - $5.99 lb |
| Drum stick | - $5.99 lb |
| Karunsiyam | - $4.99 lb |
| யாழ்ப்பாணத்து இராசவள்ளி | - $3.99 lb |
| Beetroot | - $1.29 lb |
| தக்காளி | - $1.99 lb |
| Pumpkin | - $1.49 lb |
| யாழ்ப்பாணத்துக் கருணைக்கிழங்கு | - $6.99 lb |
| Ceylon விளைமீன் | - $8.99 lb |
| ஊர் ஆட்டிறைச்சி | - $8.99 lb |
| ஊர்க் கோழி | - $7.99 lb |
| கடுக்கனிப் பாரை | - $8.99 lb |
| இறால் shrimp | - $3.99 lb |
| Blue fish | - $3.99 lb |
| சுறா fish | - $5.99 lb |
| முழு king fish | - $8.99 lb |
| நெத்தலி | - $7.99 lb |
| சுராப்பாரை | - $7.99 lb |
| சூடை | - $3.99 lb |
| திருக்கை | -$5.99 lb |

1145 Morningside Ave Unit #33, Scarborough, ON M1B 0A7

Contact : 416 283 9998




# பாடசாலை மட்டத்தில் நடந்த தமிழ் மொழித் தின நிகழ்வு

(பழுவூரான்)

மாணவர்களின் மொழி ஆற்றல் திறனை மேம்படுத்தும் முகமாகவும், கலை கலாசாரத்தை ஊக்கு விக்கும் வகையிலும் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்பட்ட தமிழ் மொழித் தின விழா இன்று மட்டக்களப்பு இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு இந்து கல்லூரி அதிபர் எஸ். பகீரதன் தலைமையில் நடைபெற்ற, மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட தமிழ் மொழித் தினப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலக அதிகாரிகள், கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.















# மட்டு. பொலிஸ் உத்தியோதர்களுக்கான சேவை நலன் சன்மானம் வழங்கும் நிகழ்வு

(பழுவூரான்)

கிழக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோகனவின் பணிப்புரையில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அமல் எதிரிமான தலைமையில் இடம் பெற்ற மாவட்ட பொலிஸ் உத்தியோதர்களுக்கான சேவை நலன் சன்மானம் வழங்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் உதித்த லியனகே அதிதியாகக் கலந்து கொண்டார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த மூன்று மாத காலப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு கடமையின் போது பொலிஸ் உத்தியோதர்கள் ஆற்றிய சேவையைப் பாராட்டிச் சன்மானம் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் பணியாற்றிய பொலிஸாரின் சேவை நலனுக்காக சன்மானமாக பெறுமதியான பணப் பரிசில்களும், சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.





















# தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் திருகோணமலையில் செயலமர்வு இடம்பெற்றது





(ஏ.எச். ஹஸ்பர்)

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் திருகோணமலை மாவட்ட பிரதேச ஊடகவியலாளர்கள், ஊடக ஆர்வலர்கள், சிவில் செயல்பாட்டாளர்களுக்கான செயலமர்வொன்று திருகோணமலையில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று இடம் பெற்றது.

இந்த செயலமர்வினை விடியல் இணையத்தளமும் மட்டக்களப்பிலுள்ள American iHub நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது.

இதில் தகவல் உரிமை சட்டத்தின் பிரகாரம் அரச திணைக்களங்கள், அதிகார சபைகள் இடம் இருந்து கோரிக்கை அனுப்பி எவ்வாறு தகவல்களை பெறுதல் மற்றும் தகவல் ஆணைக்குழு உள்ளிட்ட விண்ணப்பங்கள் தொடர்பிலும் தெளிவூட்டப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு வளவாளராக விடியல் இணையத்தளத்தின் பிரதம ஆசிரியரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான றிப்தி அலி கலந்து கொண்டார்.

இதில் பிரதேச ஊடகர்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் என சுமார் 30 நபர்கள் கலந்து கொண்டனர்.

# இஸ்லாமாபாத் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரணதர மாணவர் தினம்











(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. சாதாரணதர மாணவர் தின நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மிகவும் கோலகலமாக நடைபெற்றது.

பகுதித் தலைவர் இஸட்.எம். நூறுல் அமீன் தலைமையில் இடம்பெற்றஇந்த நிகழ்வில், அதிபர் ஏ.ஜி.எம். றிசாத் பிரதம அதிதியாகவும், பிரதி அதிபர் எம்.எச்.எம். ஜிப்ரி, மௌலவி எம்.ரி.ஏ. முனாப் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன. “நயனம்“ எனும் பெயரில் சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

பாடசாலையின் ஏனைய பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர்களும் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.



# ஓய்வு நிலை இராணுவ அதிகாரிகளின் ‘ரைட் வித் ரைட்’ சைக்கிள் சவாரி பயணம்

(பழுவூரான்)

“தொற்றா நோயிலிருந்து தேக ஆரோக்கியத்தை வளப்படுத்துவதற்கு வயதெல்லை அவசியமில்லை“ என்பதனை வலியுறுத்தி “ரைட் வித் ரைட்” எனும் தொனிப்பொருளில் ஓய்வு நிலை இராணுவ அதிகாரிகளினால் கடந்த மாதம் 28 ஆம் திகதி கொழும்பு காலிமுகத் திடலில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட விழிப்புணர்வு

சைக்கிள் சவாரிப் பயணம் இன்று மட்டக்களப்பை சென்றடைந்தது.

முப்படையினரின் ஒத்துழைப்புடன் ஓய்வு நிலை மேஜர் ஜெனரல் அதிகாரிகளான பாலசூரிய மற்றும் பிரேமலால், கேணல் பெரேரா ஆகிய மூன்று ஓய்நிலை இராணுவ அதிகாரிகளினால் 11 நாள் கொண்ட 1300 கிலோ மீட்டர் பயணத்தை நாடு முழுவதும் மேற்கொண்டு 12 ஆவது நாள் மீண்டும் கொழும்பு காலிமுகத் திடலில் சைக்கிள் சவாரிப் பயணத்தை நிறைவு செய்யவுள்ளனர்.

முப்படையினரின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட விழிப்புணர்வு சைக்கிள் சவாரிப் பயணம் மட்டக்களப்பு நகருக்கு சென்றபோது, மட்டக்களப்பு கல்லடி 243 ஆவது இராணுவ படை பிரிவு கட்டளை அதிகாரி பிகேடியர் சந்திம குமாரசிங்க, லெப்டினல் கேணல் தம்மிக, குருக்கள் மடம் 11 ஆவது சிங்க ரெஜிமெந்து இராணுவ படைப் பிரிவு கட்டளை அதிகாரி நிமால் பத்மஸ்ரீ, ஸ்ரீலங்கா தேசிய பாதுகாப்பு படைப் பிரிவு கட்டளை அதிகாரி புன்ன டீ சொய்சா மற்றும் இராணுவ அதிகாரிகள் வரவேற்று கௌரவம் அளித்தனர்.











# உதைபந்தாட்ட சுற்று போட்டியில் முல்லைத்தீவு புனித ஜூட்ஸ் வெற்றி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

வெற்றிலைக்கேணி புனித செபஸ்தியார் விளையாட்டு கழகத்தால் நடாத்தப்பட்டு வருகின்ற அணிக்கு 07 பேர் கொண்ட வட மாகாண ரீதியாக மாபெரும் உதைபந்தாட்ட சுற்று போட்டியில் கிளிநொச்சி உழவர் ஒன்றிய விளையாட்டு கழகத்தை எதிர்த்தாடிய முல்லைத்தீவு புனித ஜெட்ஸ் விளையாட்டுக்கழகம் 05 – 01 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் முல்லைத்தீவு ஜுட்ஸ் அணியின் சார்பில் பகீரதன் மற்றும் மெண்டிஸ் ஆகியோர் தலா இரண்டு கோல்களையும்,ஜோசுவா ஒரு கோலையும் அடித்தனர்.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயனாக புனித ஜுட்ஸ் கழகத்தின் வீரர் மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டார்.



# வெப்பநிலை கடுமையாக உயர்வடையும் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மொனராகலை மாவட்டத்தின் சில இடங்களிலும் இன்றைய தினம் வெப்பநிலை எச்சரிக்கை மட்டத்துக்கு உயர்வடையக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அத்துடன் மேல், சபரகமுவ மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களிலும் வெப்பநிலையானது அதிகரிக்கக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, மேல் மற்றும் சபரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளிலும் இன்று மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# அம்பாறை குருகுலத்தில் நாவுக்கரசர் குருபூஜை



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலத்தில் நாவுக்கரசர் பெருமானுடைய குரு பூசை தினம் நேற்று முன் தினம் சிறப்பாக நடைபெற்றது.

விநாயகபுரத்தில் அமைந்து உள்ள குரு குல இல்லத்தில் அதன் ஸ்தாபகர் பணிப்பாளர் கண. இராசரெட்ணம் தலைமையில் குருபூஜை இடம் பெற்றது.

இதன்போது, போட்டி நிகழ்ச்சிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் அறநெறி பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து சிறப்பித்தனர்.







# ஸ்ரீசபாரெத்தினத்தின் நினைவேந்தல் நிகழ்வு

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் ஸ்ரீசபாரெத்தினத்தின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வு கோண்டாவில் அன்னங்கை தோட்ட வெளியில் இன்று காலை இடம்பெற்றது.







# கஞ்சி வழங்கும் நிகழ்வு யாழில் இடம்பெற்றது

யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவாக கஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கப்பட்டது.


இறுதி யுத்தத்தின்போது மக்களின் உணவாக கஞ்சி காய்ச்சி வழங்கப்பட்டது. அதன் நினைவாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இனிமேல் இவ்வாறு ஒரு அவலம் ஏற்படாது இருப்பதை உறுதிப்படுத்தவும் இந்த நிகழ்வு நடைபெற்றதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.





















# புன்னக்குடாவில் பாலர் பாடசாலைக்கான சிறுவர் விளையாட்டு பூங்கா திறந்துவைப்பு

(பழுவூரான்)

மட்டக்களப்பு – புன்னக்குடாப் பகுதியில் உள்ள கிழக்கு மாகாண சிங்களப் பாலர் பாடசாலைக்கான மலசலகூடத் தொகுதி மற்றும் சிறுவர் விளையாட்டுப் பூங்கா என்பனவற்றை திறந்து வைக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

மட்டக்களப்பு – திம்புலாகல விகாராதிபதி ஶ்ரீதேவலங்காரவின் வேண்டுகோளுக்கமைய

“ரொஷான் மஹாநாம“ அமைப்பின் நிதிப்பங்களிப்பில் கிரான் தொப்பிக்கல 232 படையணிப் பிரிவின் ஒருங்கிணைப்புடன் மேற்படி பாலர் பாடசாலைக்கான மலசலகூடத் தொகுதி மற்றும் சிறுவர் விளையாட்டுப் பூங்கா என்பன திறந்து வைக்கப்பட்டன.

52 லட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் இவை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்விற்கு அதிதிகளாக திம்புலாகல விகாராதிபதி ஶ்ரீதேவலங்கார, “ரொஷான் மஹாநாம” அமைப்பின் தலைவர்

ரொஷான் மஹாநாம, முன்னாள் கிரிக்கெட் வீரர்களான ரொமேஸ் கலுவித்தாரன, சமிந்த வாஸ், மேஜர் ஜெனரல் கொமாடுவ பெரேரா, தொப்பிக்கல 232 இராணுவ படைப் பிரிவின் பிரிகேடியர் ஆர்.பீ.எஸ்.பிரசாத் ஆகியோருடன் இராணுவ அதிகாரிகள், புன்னக்குடா கிராம மக்கள், பெற்றோர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வரவேற்பு நடனம், சிறுவர் நடனம் என்பன இடம்பெற்றன.

அத்தோடு, அதிதிகளினால் சிறுவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.







# கர்நாடகா மாநிலத்தில் காங்கிரஸ் 20 தொகுதிகளில் வெற்றி பெறும்

## முதல்வர் சித்தராமையா நம்பிக்கை

கர்நாடாகாவில் இருக்கும் 28 மக்களவைத் தொகுதிகளில் காங்கிரஸ் கட்சி குறைந்தது 20 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று மாநில முதல்வர் சித்தராமையா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மாநிலத்தின் பெலகவியில், துணை முதல்வர் டி.கே. சிவகுமார், காங்கிரஸ கட்சியின் பொதுச்செயலாளர் ரன்தீப் சிங் சுர்ஜ்வாலாவுடன் இணைந்து கூட்டாக செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மாநிலத்தில் இன்று மாலையுடன் பிரச்சாரம் நிறைவடைகிறது. மே 7 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. ஏப்ரல் 26 ஆம் திகதி நடந்து முடிந்த முதல்கட்ட வாக்குப்பதிவு குறித்து எங்களுக்கு கிடைத்த தகவலின் படி, காங்கிரஸ் கட்சி 8 - 9 தொகுதிகளில் வெற்றி பெறும். இந்த இரண்டாவது கட்ட வாக்குப்பதிவில் காங்கிரஸ் நிர்வாகிகளிடம் இருந்து வந்த தகவலின் படி, காங்கிரஸ் கட்சி 10 இற்கும் அதிகமான இடங்களில் வெற்றி பெறும்.

மாநிலத்தில் உள்ள 28 மக்களவைத் தொகுதிகளில் குறைந்தது 20 தொகுதிகளில் எங்கள் கட்சி வெற்றி பெறும். ஏனென்றால் சட்டப்பேரவைத் தேர்தலின் போது நாங்கள் அளித்த 5 வாக்குறுதிகளையும் நிறைவேற்றியிருக்கிறோம். எந்த இடைத்தரகரும் இல்லாமல், பயன்கள் அனைத்தும் என் மூலமும் துணை முதல்வர் டி.கே.சிவகுமார் மூலமும் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் சென்று சேர்கிறது.



கடந்த எட்டு மாதங்களாக நாங்கள் அனைத்து வாக்குறுதிகளையும் நடைமுறைப்படுத்தியுள்ளோம். மே 20ம் திகதி காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பேற்றது. சட்டப்பேரவை தேர்தல் பிரச்சாரத்தின் போதே, எடியூரப்பா அரசால் 7 கிலோவில் இருந்து 5 கிலோவாக குறைக்கப்பட்டு வழங்கப்பட்ட அரிசியின் அளவினை 10 கிலோவாக உயர்த்தி வழங்க கோரிக்கை வைக்கப்பட்டன. அதனை நாங்கள் நிறைவேற்றியுள்ளோம்.

காங்கிரஸ் கட்சி தனது வாக்குறுதிகளை தொடர்ந்து நிலை நிறுத்தும். பா.ஜ.க. தலைவர்கள் வம்புக்காக காங்கிரஸ் கட்சியின் வாக்குறுதிகள் நிறுத்தப்படும் என்று கூறிவருகிறார்கள். பா.ஜ.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தால், அரசியலமைப்பை மாற்றுவோம் என்று அக்கட்சியின் தலைவர்கள் கூறி வருகிறார்கள். மக்களவைத் தேர்தலில் 400 இடங்களில் வெற்றி பெற்றால், அவர்கள் அரசியலமைப்பை மாற்றுவார்கள். 400 இடங்களில் வெற்றி பெறும் வரை அமைதி காக்குமாறு ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பாகவத்தும் கூறுகிறார். பா.ஜ.கவுக்கு ஒருபோதும் அரசியல் அமைப்பின் மீது மரியாதை இருந்தது இல்லை. அதனால் தான் நாங்கள் இந்த மக்களவைத் தேர்தலை இரண்டாவது சுதந்திர போர் என்று கூறுகிறோம் - என்றார்.

# ராமர் கோவில் பிரதிஷ்டையின் பின்னர் அயோத்தி செல்கின்றார் நரேந்திர மோடி





பிரதமர் நரேந்திர மோடி ராமர் கோவில் பிரதிஷ்டை விழாவுக்கு பின்னர் முதன்முறையாக அயோத்தி செல்கிறார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியா முழுவதும், மக்களவைத் தேர்தல் 7 கட்டங்களாக நடைபெறவுள்ள நிலையில் கடந்த மாதம் 19 ஆம் திகதி 102 தொகுதிகளுக்கு முதற்கட்ட வாக்குப்பதிவும், 89 தொகுதிகளுக்கு 26 ஆம் திகதி இரண்டாம் கட்ட வாக்குப்பதிவும் நடைபெற்றுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி 94 மக்களவைத் தொகுதிகளுக்கு மூன்றாம் கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

தேர்தலையொட்டி அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர பிரச்சாரம் செய்து வரும் நிலையில் பிரதமர் மோடி இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பாரத ஜனதா மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்து வருகிறார்.

அந்தவகையில் தான் உத்தரபிரதேச மாநிலம் அயோத்தியில் பிரதமர் மோடி இன்று வீதி ஊர்வலம் மேற்கொள்ளவுள்ளார் என கூறப்படுகின்றது.

சமாஜ்வாதி கட்சியின் கோட்டையான அம்மாநிலத்தின் எட்டாவாவிலும், மதியம் சீதாபூரிலும் தேர்தல் பிரசாரம் மேற்கொண்ட பின்னர் பிரதமர் மோடி, அயோத்தி செல்லவுள்ளார்.

அங்கு சுவாமி தரிசனம் செய்த பின்னர், லதா சவுக் வரை ரோடு ஷோ மேற்கொண்டு வாக்கு சேகரிக்கவுள்ளார்.

அயோத்தியில் கடந்த ஜனவரி மாதம் கும்பாபிஷேக விழா நடைபெற்று குழந்தை ராமர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதன் பின்னர் முதன்முறையாக பிரதமர் மோடி இன்று அயோத்தி செல்ல உள்ளார். எனவே, அயோத்தி ராமர் கோவில் பூக்களால் அலங்கரிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது.



# அவுஸ்திரேலியாவில் கத்திகுத்து: 16 வயது சிறுவன் சுட்டுக் கொலை

அவுஸ்திரேலியாவின் பெர்த்தின் புறநகர் பகுதியான வில்லெட்டனில் 16 வயது சிறுவன் ஒருவர் கத்திக்குத்து தாக்குதலில் ஈடுபட்டுள்ளார்.

அந்த, சிறுவன் பொதுமக்களை கத்தியால் குத்தி தாக்குதல் நடத்தியதை அறிந்ததும் பொலிஸார் அங்கு விரைந்துள்ளனர்.

அப்போது அங்கிருந்த அந்த சிறுவன் கத்தியுடன் பொலிஸாரை நோக்கி வந்த நிலையில் அந்த சிறுவனை கத்தியைக் கீழே போடுமாறும் மற்றும் சரணடையுமாறும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆனால் அதற்கு மறுத்த சிறுவன் தொடர்ந்து தாக்குதல் நடத்த முயன்றதால் அவர் மீது பொலிஸார் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதையடுத்து சிறுவனை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மேலும், இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# உக்ரைன் ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு; தேடப்படுவோர் பட்டியலில் சேர்த்தது ரஷ்யா

உக்ரைன் ஜனாதிபதி விளோடிமீர் ஜெலன்ஸ்கிக்கு எதிராக வழக்கு பதிவு செய்து, அவரை தேடப்படுவோர் பட்டியலில் ரஷ்யா வைத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், ரஷ்யாவின் உள்துறை அமைச்சரின் தகவலின் படி ரஷ்யாவின் தேடப்படுவோர் பட்டியலில் உக்ரைன் ஜனாதிபதி சேர்க்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.



அத்தோடு, கடந்த ஆண்டு சர்வதேச நீதிமன்றத்தின் வழக்கறிஞர் மீதும் ரஷ்யா பிடியாணை பிறப்பித்திருந்த நிலையில் உக்ரைன் அதனை முற்றாக நிராகரித்துள்ளது.

இந்த நிலையில், உக்ரைனின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், ரஷ்ய சர்வாதிகாரி விளாடிமிர் புடினுக்கு திராக போர் குற்றங்களை புரிந்த சந்தேகத்தின் பேரில் கைது செய்வதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதே வேளை, இந்த பிடியாணை சுமார் 123 நாடுகளில் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



# பிரேசிலில் தொடரும் புயலுடன் கூடிய மழையால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 57 ஆக உயர்வு

பிரேசிலில் பெய்து வரும் வரலாறு காணாத மழையினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 57 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், ரியோ கிராண்டே டு சுலில் 67 பேர் காணாமல் போயுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அனர்த்தத்திற் 69 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மழையினால் வீடுகளை இழந்துள்ள பலர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரேசிலின் தெற்கு நகரமான ரியோ கிராண்ட் டு சூல் பகுதியில் தொடர் மழை பெய்தது. உருகுவே, அர்ஜென்டினாவின் எல்லை நகரங்களும் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளது.

பிரேசிலில் 80 ஆண்டுகால வரலாற்றில் இல்லாதளவில் புயலுடன் மழை பெய்து வருவதால் பாதிப்பின் தாக்கம் அதிரித்துள்ளது.

போர்ட்டோ அழகர் பகுதியில் குளம் உடைந்ததில் வீதிகள் முழுவதும் வெள்ள நீரால் மூழ்கியுள்ளன.

அங்குள்ள சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டுள்ளது. மீட்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பக்கங்கள் 05

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 05/05/2024

## ரயிலுடன் மோதி கார் விபத்தில்!

ஒன்ராரியோ, மே 05

மே 4ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் கலிடோனில் கார் ஒன்று ரயிலில் மோதியதில் சாரதி ஒருவர் மருத்துவமனையில்

C2

# காஸாவில் மனிதப் பேரழிவைத் தடுப்பதற்கு சர்வதேச நடவடிக்கை அவசரம்;அவசியம்!

## வலியுறுத்துகின்றது கனடியத் தமிழர் பேரவை

Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

ஒன்ராரியோ,மே05

காஸாவில் பொதுமக்கள் உயிரிழப்பதனை தடுப்பதற்கு உடனடி சர்வதேச நடவடிக்கையை கனடியத் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து கனடியத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'மே மாதம் என்பது தமிழ் சமூகத்திற்கு ஒரு நினைவுகூரும் மாதமாகும். மேலும் இது மோதலின் கொடூரத்தை ஆழமாகப் புரிந்து கொண்டுதான், கனடியத் தமிழர் பேரவை தற்போது காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறது. வன்முறையை நிறுத்தவும், மேலும் உயிர்ச் சேதத்தைத் தடுக்கவும் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச சமூகத்தை நாங்கள் அவசரமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

C2

# கியூபெக்கின் புதிய மொழி மறுசீரமைப்பு அரசமைப்புக்குட்பட்டதா என்று கேள்வி!

## நீதிமன்றம் பரிசீலித்து முடிவை அறிவிக்கும்




கியூபெக், மே 05

கியூபெக் மாகாணத்தின் புதிய மொழி மறுசீரமைப்பு அரசமைப்புக்குட்பட்டதா என்பதை கியூபெக் நீதிமன்றம் அறிவிக்கவுள்ளது.

இந்தச் சட்டத்தின் ஒரு பகுதியானது ஆங்கிலத்தில் அளிக்கப்பட்ட தண்டனையின் அமுல்படுத்தலை கட்டமைப்பு சார்ந்து தாமதப்படுத்துவதாக நீதிபதி டென்னிஸ் கைலஸ்டோல் கேள்வி எழுப்பியுள்ளார்.

சைக்கிளோட்டி ஒருவர் காரில் மோதி உயிரிழந்தமை தொடர்பில் காரைச் செலுத்திய பெண்மணி சார்ந்த குற்றவியல் அலட்சியம் வழக்கு குறித்த தீர்ப்பின் போதே நீதிபதி இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

ஆங்கில மொழியிலான தீர்ப்புகள் உடனடியாக, தாமதமின்றி பிரெஞ்சு மொழிக்கு மொழிபெயர்க்கப்படல் வேண்டும் என கோரும் கியூபெக் மொழி சட்டத்தின் பிரிவின் செல்லுபடியாகும் தன்மைதொடர்பில்தீர்ப்பளிக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கியூபெக் மற்றும் கனடிய சட்டமா அதிபர் திணைக்களங்களை மே 14ஆம் திகதிக்குள் இது குறித்து கருத்து தெரிவிக்குமாறு அவர் பணித்துள்ளார்.




# அவசரகாலச் சட்டப் பயன்பாடு பற்றிய அறிக்கை பல மாதங்கள் தாமதமாகும்

ஒன்ராரியோ, மே 05

அவசரகாலச் சட்டத்தின் பயன்பாடு குறித்து நாடாளுமன்ற அறிக்கைக்கு பல மாதங்கள் காலம் தாமதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

'ஃப்ரீடொம் கொன்வே' எனப்படும் குழுவினரால் கொவிட் பெருந்தொற்றுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்துவதற்கு கனடிய அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தியிருந்தது.

இது தொடர்பில் கற்பதற்கான கனடிய அரசாங்கத்தின் செனட் உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவின் அறிக்கை 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சமர்ப்பிக்கப்பட காலம் நிர்ணயிக்கப் பட்டிருந்தது.

இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், இது தொடர்பில் சேகரிக்கப்பட்ட பெருந்தொகையான ஆவணங்கள் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டிய தேவையுள்ளதால் அறிக்கை சமர்ப்பிப்பு காலம் தாமதிப்பதாக செனட் உறுப்பினர் பீட்டர் ஹார்டர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கைக்காக மக்கள் காத்திருக்கின்றனர் எனத் தாம் நினைக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.




## ரயிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஹம்பர் ஸ்டேஷன் வீதியில் மாலை 5 மணிக்குப் பின்னர் இந்த மோதல் இடம்பெற்றதாக ஒன்றாறியோ மாகாண பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில் 20 வயதில் ஒரு பெண் கடுமையான காயங்களுடன் டொராண்டோ அதிர்ச்சி மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

விபத்து நடந்த சமயம் காரில் சாரதி மட்டும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## காஸாவில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காஸாவில் நிலவும் நெருக்கடியானது கணிசமான பொதுமக்கள் உயிரிழப்புகளையும் துன்பங்களையும் விளைவித்துள்ளது. வன்முறையைத் தடுக்க சர்வதேச அமைப்புகள், அரசாங்கங்கள் மற்றும் செல்வாக்கு மிக்க அமைப்புகள் திறம்படத் தலையிடுவது கட்டாயமாகும். குடிமக்கள் பாதுகாக்கப்பட வேண்டும், மேலும் அனைத்துத் தரப்பினரும் சர்வதேச சட்டங்கள் மற்றும் மனிதாபிமான தரங்களைக் கடைபிடித்து அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

உடனடியான போர்நிறுத்தத்தைக் கொண்டுவருவதற்கு கிடைக்கக்கூடிய அனைத்து வளங்களையும் செல்வாக்கையும் பயன்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் மற்றும் பிற சர்வதேச நிறுவனங்களை நாங்கள் வலியுறுத்துகிறோம். மனித உயிர்களுக்கு முன்னுரிமை அளித்து அமைதியை நோக்கிச் செயல்படும் இராஜதந்திர உரையாடல்களைத் தொடங்குவது முக்கியமானது.

உலகளாவிய சமூகத்தின் உறுப்பினர்களாக, மேலும் துன்பங்களைத் தடுப்பது மற்றும் அமைதி மற்றும் நீதிக்காக வாதிடுவது எங்கள் தார்மீக கட்டாயமாகும். அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கும், தற்போதைய மோதல்களால் உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளவர்களுக்கும் எங்களது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்கள் கடந்த காலத்தை நினைவுகூரும் வகையில், காஸாவில் அமைதியைக் கொண்டுவரவும், மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் எங்கள் ஆதரவை உறுதியளித்து, குரல் எழுப்புகிறோம்.

இந்த அவசர வேண்டுகோளில் எங்களுடன் சேரவும், அமைதி மற்றும் மனித கண்ணியம் பற்றிய செய்தியை மேம்படுத்தவும் எங்கள் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் மற்றும் பங்காளிகளை நாங்கள் அழைக்கிறோம். கடந்த கால அவலங்கள் நிகழ்காலத்தில் மீண்டும் நிகழாமல் இருக்க நமது முயற்சிகளில் ஒன்றுபடுவோம். – என்று உள்ளது.

# டொரன்டோ பல்கலை பேராசிரியர் கூடாரப் போராட்டத்துக்கு ஆதரவு

ஒன்ராரியோ, மே 05

டொரன்டோ பல்கலைக்கழகத்தில் பலஸ்தீனத்திற்கு ஆதரவான போராட்டக்காரர்களின் கூடாரங்களில் பேராசிரியர் ஒருவரும் ஆதரவு தெரிவித்து கலந்துகொண்டுள்ளார்.

டொரன்டோ பல்கலைக்கழகத்தின் துணைப் பேராசிரியரான ரொபின் மேனார்ட் மே 4ஆம் திகதி சனிக்கிழமை கூடாரங்களில் இணைந்து கொண்டு போராட்டத்திற்கு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

அங்கு ஒற்றுமையுடன் ஏராளமான பல்கலைக்கழக ஆசிரியர்கள் இருக்கின்றனர் எனஅவர் கூறியுள்ளார்.

மாணவர்கள் இங்கு பங்குபற்றியிருக்கும் நிலையில், அவர்களுக்கான ஆபத்துகளின் அடிப்படையில், தாங்கள் இங்கே சாட்சிகளாக இருப்பது மிகவும் முக்கியமானது என்று தாம் உணர்கிறார் எனஅவர் தெரிவித்துள்ளார்.

'இங்கே இருப்பதும் முக்கியம், ஏனென்றால் அவர்களின் கோரிக்கைகள் முக்கியம்....இஸ்ரேலில் இருந்து விலகும்படி பல்கலைக்கழகத்தை கேட்டுக்கொள்கிறேன்,' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கனடாவில் கைதான மூன்று பேர் பற்றிய விவரங்களுக்குக் காத்திருக்கும் இந்தியா



கனடாவில் அண்மையில் கைதான இந்தியர்கள் தொடர்பிலான தகவல்களுக்காக காத்திருப்பதாக இந்தியா அறிவித்துள்ளது.

சீக்கிய ஆன்மீகத் தலைவர் ஹார்டிப் சிங் நிஜாரின் படுகொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் மூன்று இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைதுகள் தொடர்பில் கனடிய அதிகாரிகளின் தகவல்களுக்காகக் காத்திருக்கின்றனர் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

கைதானவர்கள் பற்றிய விவரங்களை அதிகாரபூர்வமாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என கனடாவிற்கான இந்திய உயர்ஸ்தானிகர் சஞ்சய் வர்மா தெரிவித்துள்ளார்.

இந்த கைதுகள் கனடாவின் உள்விவகாரம் எனவும், இந்த விடயத்தில் கருத்து வெளியிடப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆன்மீகத் தலைவர் நிஜாரின் படுகொலையில் இந்திய அரசாங்கம் தொடர்புபட்டிருப்பதாக கனடா குற்றம் சுமத்தியிருந்தது.

இதன் காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் பாரிய இராஜதந்திர முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடு; பாதிப்புற்றார் என கென்னி கியூ கருத்து

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 05

2021ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடு குறித்த பெடரல் விசாரணையின் முடிவுகளில் இருந்து தாம் பாதிக்கப்பட்டுள்ளார் என உணர்கின்றார் என்று பிரிட்டிஷ் கொலம்பியாவின் முன்னாள் கன்சர் வேட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினர் கென்னி கியூ தெரிவித்துள்ளார்.

கனடாவுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் யுத்தமாக தாம் இதனைப் பார்க்கிறார் என கியூ குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து பொறுப்புடைமை மற்றும் வெளிப்படைத்தன்மை அவசியம் என ஆளும் லிபரல் அரசாங்கத்திடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

2019 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தல்களில் வெளிநாட்டுத் தலையீடு தொடர்பில் கிடைத்த புலனாய்வுப் பிரிவினரின் தகவல்களைத் தொடர்ந்து, பெடரல் விசாரணைக் குழுவொன்று கடந்த சில வாரங்கள் பல்வேறு சாட்சியங்களைப் பதிவு செய்திருந்தது.

இந்த விசாரணைகளின் பூர்வாங்க அறிக்கையை மேரி-ஜோசே ஹோக் மே 3ஆம் திகதி வெளியிட்டார்.

சில சிறிய தேர்தல் தொகுதிகளில் வெளிநாட்டுத் தலையீடுகள் தாக்கத்தை செலுத்தியிருக்கலாம் என அவர் இதன் போது தெரிவித்திருந்தார்.



# ஒவ்வொரு 40 நிமிடத்துக்கும் ஒரு வாகனம் ரொறன்ரோவில் திருட்டுப் போகும் நிலை!

கனடாவின் ரொறன்ரோவில் ஒவ்வொரு நாற்பது நிமிடத்துக்கும் ஒரு தடவை வாகனமொன்று களவாடப்படுவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஆண்டில் பதிவான புள்ளி விவரத் தகவல்களின் அடிப்படையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, இந்த ஆண்டில் வாகனத் திருட்டுச் சம்ப வங்கள் மேலும் அதிகரித்துள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொலிஸாரும், நகர நிர்வாகமும் கூட்டாக இணைந்து வாகனத் திருட்டுச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வாகனங்கள் திருடப்பட்டு வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமான முறையில் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன எனவும் கூறப்படுகின்றது.



# ஏதிலி அந்தஸ்து கோரிக்கைகளை விரைந்து முடிக்க கனடா தீர்மானம்

கனடாவில் ஏதிலி அந்தஸ்து நிராகரிக்கப்படும் நபர்கள் துரித கதியில் நாடு கடத்தப்படக்கூடிய முறைமை அறிமுகம் செய்யப்பட உள்ளது.

இதற்காக கனடிய குடிவரவு மற்றும் ஏதிலிகள் பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் கனடாவில் கற்கும் வெளிநாட்டு மாணவர் களின் ஏதிலி அந்தஸ்து கோரிக்கை 1500 வீதமாக உயர் வடைந்துள்ளது.

மாணவர் வீசா காலம் முடிவடைந்த தன் பின்னர் தொடர்ந்தும் கனடாவில் தங்கியிருக்கும் நோக்கில் இவ்வாறு ஏதிலி அந்தஸ்து கோரப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரையில் 46,736 பேர் கனடாவில் ஏதிலிஸ் அந்தஸ்து கோரி விண்ணப்பம் செய்துள்ளனர்.

கடந்த 2023ம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இந்த எண்ணிக்கை 62 வீத அதிகரிப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் பெரும் எண்ணிக்கையிலான ஏதிலிக் கோரிக்கை விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படாதிருக்கின்றப எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் ஏதிலி கோரிக்கை விண்ணப்பங்களை துரிதப்படுத்தவும், நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகளை விரைவில் நாடு கடத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இதற்காக தற்போதைய குடிவரவு சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட உள்ளன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, ஏதிலி கோரிக்கை விண்ணப்பங்களை துரித கதியில் பரிசீலனை செய்யும் அரசாங்கத்தின் நடவடிக்கையானது மக்களின் உரிமைகளை பாதிக்கும் என குடிவரவு மற்றும் ஏதிலிகள் சட்டத்தரணியான சான்டால் டெஸ்லோக்ஸ் தெரிவித்துள்ளார்.

# பாதிப்புற்ற பழங்குடியினப் பெண்களுக்கான பிரசார அடையாளமாகச் சிவப்பு ஆடைகள்!

பிரிட்டிஷ் கொலம்பியா, மே 05

காணாமல்போன மற்றும் கொலை செய்யப்பட்ட பழங்குடியினப் பெண்களுக்கான பிரசார அடையாளமாகச் சிவப்பு ஆடைகள் மாறவுள்ளன.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் இந்த வார இறுதியில், நடைபெறவுள்ள ஃபெஷன் ஷோவில், சிவப்பு நிறத்திலான ஆடைகள் சக்திமிக்க பிரசார ஆயுதமாக பயன்படுத்தப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின், கம்லூப்ஸ் பகுதியில் இரண்டு நாள்கள் புரட்சிகர சிவப்பு ஆடை ஃபெஷன் ஷோவை ஒழுங்குபடுத்தும் கிம் கோல்ட்மன், 'இந்த ஃபெஷன் ஷிவின் ஊடாக வெளியாகும் கதைகள் ஆழமானவை' எனத் தெரிவித்துள்ளார்.

இந்த ஃபெஷன் ஷோவில் கலந்து கொள்ளும் ஒன்பது முன்னணி ஆடை வடிவமைப்பாளர்கள் சிவப்பு ஆடை தினத்தை கௌரவிக்கும் வகையில் ஆடைகளை வடிவமைத்துள்ளன என கோல்ட்மன் குறிப்பிட்டுள்ளார்.





# பாதுகாப்பாக வாழ்வதற்கான அடிப்படை உரிமை சகல கனடியர்களுக்கும் உண்டு என்கிறார் பிரதமர்

## நிஜ்ஜார் கொலை தொடர்பில் மூவர் கைது பற்றி அவர் கருத்து

ஒன்ராரியோ, மே 05

சீக்கிய செயற்பாட்டாளர் ஹர்தீப் சிங் நிஜ்ஜாரின் கொலை தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

டொராண்டோவில் உள்ள ரோயல் ஒன்ராரியோ அருங்காட்சியகத்தில் உள்ள கனடாவின் சீக்கிய அறக் கட்டளையின் நிகழ்ச்சியில் சனிக்கிழமை பேசிய ட்ரூடோ, கனடியர்கள் பாகுபாடு மற்றும் வன்முறை அச்சுறுத்தல்கள் இல்லாமல் பாதுகாப்பாக வாழ்வதற்கான அடிப்படை உரிமையைக் கொண்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

ஜனநாயகக் கொள்கைகள் மற்றும் நீதி அமைப்புக்கான அர்ப்பணிப்பில் அமைதி மற்றும் உறுதியுடன் இருக்குமாறு ட்ரூடோ இதன்போது அழைப்பு விடுத்தார்.

2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 18ஆம் திகதி சர்ரே பகுதியில் வைத்து முகமூடி அணிந்த இருவரால் நிஜார் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தியாவில் சீக்கியர்களுக்கான காலிஸ்தான் என அறியப்படும் தனியான தேசத்துக்காக பிரசாரம் செய்தவர்களில் நிஜாரும் ஒருவராவார்.

இந்த விடயம் தொடர்பில் கடந்த வருடம் செப்டம்பர் மாதம் பிரதமர் வெளியிட்ட அறிக்கையானது, இந்தியாவுக்கும், கனடாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவில் பெரும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

நிஜாரின் கொலையுடன் இந்திய அரசாங்கத்துக்கு தொடர்பிருப்பதற்கான போதியளவு ஆதாரங்கள் இருக்கின்றன எனப் பிரதமர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.